**கவனிக்க.**- 22.07.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1717 - 2011 ජූලි මස 29 වැනි සිකුරාදා - 2011.07.29**

*1717 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 66 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூலை மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

## த இன்ஸ்டிட்யுட் ஒப் சேர்டிபைட் பப்ளிக் அகவுண்டன்ஸைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர், திருமதி ஸ்ரீயாணி விஜேவிக்கிரம ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் 'த இன்ஸ்டிட்யுட் ஒப் சேர்ட்டிபைட் பப்ளிக் அகவுண்டன்ஸ்'' ஐ கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த 'த இன்ஸ்டிட்யுட் ஒப் சேர்ட்டிபைட் பப்ளிக் அகவுண்டன்ஸ் ஐ கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. உலகம் பூராகவுள்ள கணக்கியல், தொழில், நிதி ஆகிய துறைகளில் திறமை வாய்ந்த மக்களுக்கு கோட்பாடு ரீதியாகவும் செயன்முறைரீதியாகவும் கணக்கியலை முன்னெடுத்துச் செல்ல ஒரு தொழில்துறை அமைப்பை ஏற்பாடு செய்து தொடர்ந்து அதன் அங்கத்தவர்களுக்கு மக்களின் பொது நலனுக்காக உழைக்க உதவுதல் ;

2. பொது நலனுக்காக பிரயோக விஞ்ஞானம், கலைகள், வியாபாரமும் தொழிலும், அரசாங்க பொது சேவைகள் பரிபாலனம், கைத்தொழில் மேலும் வர்த்தகம் ஆகியவற்றை கணக்கியல் கலை மூலமாக மேம்படுத்துகை ;

3. கணக்காளர்களுக்கு வாழ்க்கைபூராக அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவுவதுடன் கணக்கியல் செயலாற்றுகையின் தர உயர்வுக்கு உதவி தனிப்பட்ட ரீதியில் கணக்காளர்களுக்கு பயிற்சி வழங்கி அவர்களின் உயர்வுக்கு வழி வகுத்தல்.

(திருமதி) ஸ்ரீயானி விஜேவிக்கிரம,
பாராளுமன்ற உறுப்பினர்,
திகாமடுல்ல மாவட்டம்.

7-628

---

## கொழும்பில் நடத்தப்படும் மேல் மாகாண, மாகாண வாணிப மேல் நீதிமன்றத்தில்

வழக்கு இல. : 23/2011/CO

வெஹிகல் லங்கா பிரைவேட் லிமிட்டட், இல. 310 ஏ, ஹய்லெவல் வீதி, கொழும்பு 06. விடயத்தில் மற்றும்
2007 ஆம் ஆண்டின் 07 ம் இலக்க நிறுவன சட்டத்தின் 12 ஆம் பாகத்தின் கீழ் வெஹிகல் லங்கா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தை கலைத்து ஒடுக்குவதற்கான வேண்டுகோள் விடயத்தில்

ஸ்ரீ லங்கா கிருஷ்ணமூர்த்தி நிலையம், இல. 310, ஹய்லெவல் வீதி, கொழும்பு 06.

குடியியல் நீதிமன்ற அதிகாரத்தை செயற்படுத்துவது சம்பந்தமாக கொழும்பில் நடத்தப்படும் மேல் மாகாண, மாகாண வாணிப மேல் நீதிமன்றத்தினால் மேற்படி பெயர் குறிப்பிட்ட வெஹிகல் லவர்ஸ் பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தை ஒடுக்குவதற்காக கொழும்பு 06, ஹைலெவல் ரோட்டில் 310 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா கிருஷ்ணமூர்த்தி நிலையத்தால் அந்நீதிமன்றத்திற்கு சட்டத்தரணி சரத் பி. வல்கமகே அவர்களால் 2011, மே மாதம் 03 ஆந் திகதி மனுவொன்றை சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அந்த மனு 2011 செத்தெம்பர் 06 ஆந் திகதி நீதிமன்றம் முன் விசாரணைக்கு எடுக்க கட்டளையிட்டுள்ள படியால், மேற்படி மனு தொடர்பாக கட்டளையொன்றை வழங்குவதற்கு ஆதரவாக அல்லது எதிராக கூற்றுக்களை சமர்ப்பிக்க விரும்பும் மேற்படி நிறுவனத்தின் எந்தவொரு அல்லது கடனாளிகள் அல்லது மற்றும் கட்சிக்காரர்கள் இருப்பின் அக் குறிக்கோள்களுக்காக அந்த விசாரணை நடத்தப்படும்போது தனிப்பட்ட ரீதியாக அல்லது தனது சட்டத்தரணி ஊடாக வருகைத் தர முடியும் என்பதுடன் மனுவின் பிரதியொன்று குறித்த நிறுவனத்தின் கடன்காரர்களுக்கு அல்லது மற்றும் கட்சிக்காரர்களுக்கு உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின்னர் கீழ் கையொப்பமிடும் நபரால் வழங்கப்பட முடியுமென இதன் மூலம் அறியத்தருகின்றோம் :-

சட்டத்தரணி சரத் பீ. வல்கமகே,
மனுதாரர்களின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி,
இல. 37, பன்சல வீதி,
கொழும்பு 10.

**குறிப்பு**.- மேற்படி மனு விசாரணைக்கு எடுக்கும் போது ஆஜராகுவதற்கு எதிர்பார்க்கும் எந்தவொரு நபர் இருப்பின் அதுகுறித்த எழுத்துமூல அறிவித்தல் மனுதாரர்களின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி சரத் பி. வல்கமகே அவர்களிடம் கொண்டுவந்து கையளிப்பது அல்லது தபால் மூலமாக அனுப்பப்படல் வேண்டும். அங்கு குறித்த நபரின் பெயர் அல்லது விலாசம், நிறுவனம் என்றால் அதன் பெயரும் விலாசமும் குறிக்கப்பட்டு தனிநபர் அல்லது நிறுவனம் அல்லது சட்டத்தரணிகள் (இருப்பின்) கையொப்பமிட்டு கொண்டு வந்து கையளிப்பதற்கு அல்லது தபால் மூலமாக அனுப்பப்படுமானால் போதியளவு கால அவகாசங்களுடன் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட நபருக்கு கிடைக்கும் வகையில் 2011, செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும்.

சட்டத்தரணி சரத் பீ. வல்கமகே,
மனுதாரர்களின் பதிவுசெய்யப்பட்ட
சட்டத்தரணி,

7-713

## 1942 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபைக் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

(டாக்டர்) ஜயலத் ஜயவர்தன ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் '1942 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, 'இலங்கை புனித சூசையப்பர் சகோதரர் சபைக் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

இச்சபையின் பெயரை "இலங்கை அன்புச் சகோதரர் சபை" என மாற்றுவதும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம், 2 ஆம் பிரிவுகளை திருத்துவதுமே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(டாக்டர்) ஜயலத் ஜயவர்தன,
பாராளுமன்ற உறுப்பினர்,
கம்பஹா மாவட்டம்.

7-750

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.